OS.No. 131/2015

Dated : 19.09.2023

Time: 12.40 p.m to 01.05 p.m

P.W- 1 சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1,2 பிரதிவாதிகள் சார்பாக குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை

1) கணேசன் என்பவர் 1-ம் பிரதிவாதியின் தாயார் ஈஸ்வரி என்பவரை முறைப்படி திருமணம் செய்து கொண்டாரா என்றால் திருமணம் செய்து கொண்டார். அவருடைய பிள்ளைகள்தான் 1,2 பிரதிவாதிகள். 26.08.1986 -ல் கணேசன் காலமாகிவிட்டார். ஈஸ்வரி எந்த வருடம் இறந்தார் என்று ஞாபகமில்லை. மேற்படி ஈஸ்வரியும் கணேசனும் சட்டப்படி விவாகரத்து பெறவில்லை என்றால் சரிதான். மேற்படி கணேசனை 1-ம் வாதி திருமணம் செய்து கொண்டார் என்பதற்கு ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு தரவில்லை.

2) முதல் மனைவி இருக்கும் போது இரண்டாவது திருமணம் செய்வது சட்டப்படி தவறு என்றால் சரிதான். முதல் மனைவிக்கு 7 ஆண்டுகளாக குழந்தைகள் இல்லாதால் அவர் 1-ம் வாதியை திருமணம் செய்தார். அதனால் என் தாயார் 1-ம் வாதிக்கு சட்ட பூர்வமான அந்தஸ்த்து இல்லை என்றால் சரிதான். ஆனால் கணேசன்தான் எங்கள் அப்பா. தாவா சொத்து மேற்படி கணேசனின் பூர்வீக சொத்து என்றால் சரிதான். 1-ம் வாதி பெரியம்மாள் என்பவருக்கு தகப்பனார் வழியிலோ அல்லது தாயார் வழியிலோ சொத்து ஏதாவது வந்ததா என்றால் இல்லை.

3) கணேசன் இறந்த பிறகு 1-ம் வாதி, பிரதிவாதி மற்றும் கணேசனின் தாயாரிடம் சொத்து கேட்டு பிரச்சனை செய்தார் என்றால் இல்லை. மேற்படி பிரச்சணையில் தொடர்சியாக 1986 ல் தரப்பினர்களிடையே குறிப்பாக 1-ம் வாதி மற்றும் உண்ணாமலையம்மாள், கணேசனின் முதல் மனைவி ஈஸ்வரி ஆகியோருக்கு இடையே ஒரு பஞ்சாயத்து முச்சலிக்கா எழுதப்பட்டது என்றால் அது தவறு. அதன் தொடர்ச்சியாக ஒரு தான பத்திரம் எழுதப்பட்டது என்றால் அது பொய்.

4) என்னுடைய தாயார் கணேசனின் மனைவி இல்லை என ஒப்புக்கொண்டு 1988 ல் ரூ.15,000/- கணேசனிடம் பெற்றுக்கொண்டார் என்றால் அது பொய். மேலும் என் தாயார் சொத்துக்களில் எங்களுக்கு பங்கு வேண்டாம் என விடுதலை பத்திரம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் அது பொய். மேற்படி கணேசனின் முதல் மனைவி மற்றும் அவருடைய தாயார் உண்ணாமலையம்மாள் அவர்கள் உயிருடன் இருந்த காலம் வரை 1-ம் வாதி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சட்டபூர்வமாக கணேசனை திருமணம் செய்துகொள்ளாத 1-ம் வாதி எவ்வித உரிமையும் தாவா சொத்தில் கோரமுடியாது என்றால் சரியல்ல.

5) வாதியுடன் நாங்கள் அவ்வாறு பரிகாரம் கோரவேண்டும் என்றால் 2004 இந்து வாரிசு உரிமை சட்டத்திற்கு முன்பு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் தற்போது உரிமை கோர முடியாது என்றால் அது தவறு. தாவா சொத்தில் எங்களுக்கு எவ்வித பாகமும் இல்லை என்றால் அது தவறு. சர்வே எண். 16/1, 16/2, 16/3 ஆகிய சொத்துக்கள் எங்கள் பெயரில் பட்டா மாறியுள்ளது என்றால் அவ்வாறு இல்லை. 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Subordinate Judge,**
**Attur.**